# CHALLENGES FACED BY FARMERS IN PADDY CULTIVATION: A STUDY BASED ON SAMMANTHURAI DS DIVISION

(1)MH.Risla Banu, (2)MB.Nafrin, (3)MB.Mohamed Yazeer
Department of Geography, South Eastern university of Sri Lanka, Sri Lanka
Department of Geography, South Eastern university of Sri Lanka, Sri Lanka
Department of Geography and Environmental Management, Sabaragamuwa university of Sri Lanka, Sri Lanka
mhrisla97@gmail.com, nafrinmb@gamil.com, yazusl14052@gmail.com

**Abstract**

Rice production (Paddy Cultivation) is an important economic activity in worldwide. It become Asia's preferable food. But, Nowadays Sri Lanka is expecting and depending on Rice import from other countries through it is a multinational land. The research is situated in the Ampara district, Eastern province. The area's paddy cultivation determined by the combination of physical, social and economic factors. Most of the farmers face multiple problems due to these factors in the recent past. There are articles and reports already published regarding the issue of the study area. But, there is no research had been conducted. Therefore, this research is being carried out to fill the research gap. To identify the challenge of Farmers in the Paddy cultivation, Primary and Secondary data collection methods had been used. As per the primary data, Questionnaire survey, Interviews and Plot Observations have been carried out. Secondary data have been retrieved from Internet, census reports from departments, reports and books. Eventually, through the research it has been found out that there are more than 95% of Farmers facing multiple obstacles in the Paddy cultivation in the research area. This research plays a vital part to reduce such challenges faced by the Farmers to enhance the paddy cultivation and to develop the economy from village, district and national level.

**Key words:** Cultivation, Paddy, Farmers.

**ஆய்வுச்சுருக்கம்**

உலகளாவிய ரீதியில் நெல் உற்பத்தியானது இன்றியமையாத ஒரு பொருளாதார நடவடிக்கையாக திகழ்கின்றது.நெல் இன்று ஆசியாவின் பிரதான உணவாகவும் மாறியுள்ளது. ஆனால் விவசாய நாடான இலங்கை தற்காலங்களில் ஏனைய நாடுகளில் இருந்து அரிசியின் இறக்குமதியையும் எதிர்பார்க்கும் துர்ப்பாக்கிய நிலை காணப்படுகின்றது. ஆய்வுப்பிரதேசமான சம்மாந்துறை பிரதேசமானது கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் அமையப்பெற்ற ஒரு விவசாய கிராமமாகும்.இப்பிரதேசத்தின் நெற்பயிர்ச்செய்கையானது பல பௌதீக, சமூக, பொருளாதார காரணிகளின் ஒருங்கிணைந்த செயற்பாடுகளினாலேயே தீர்மானிக்கப்படுகின்றது. அண்மைக்காலங்களில் இவ்வாறான காரணிகளின் தாக்கத்தினால் விவசாயிகள் பல்வேறு இன்னல்களுக்கு முகம் கொடுக்கின்றனர். இது தொடர்பாக ஆய்வுப்பிரதேசத்தில் கட்டுரைகள், ஆக்கங்கள் வெளியிடப்பட்டுள்ள போதிலும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவில்லை. எனவே இவ் ஆய்வு இடைவெளியை பூரணப்படுத்துவதற்காகவே இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. நெற் பயிர் வேளாண்மையில் சம்மாந்துறை பிரதேச விவசாயிகள் எதிர் நோக்கும் சவால்களை இனங்காண்பதை நோக்கமாக கொண்டு இவ் ஆய்வினை மேற்கொள்வதற்காக முதலாம் நிலைத்தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தி தரவுகள் சேகரிக்கப்பட்டன. முதலாம் நிலைத்தரவுகளாக வினாக்கொத்து, நேர்காணல், நேரடி அவதானிப்பு ஆகிய முறைகளும் இரண்டாம் நிலைத்தரவுகளாக பல்வேறு பட்ட அலுவலகங்களில் உள்ள புள்ளி விவரங்கள், அறிக்கைகள் இணையத்தளம், நூல்கள் முதலியனவும் பயன்படுத்தப்பட்டன. இவ்ஆய்வில் இறுதியாக கண்டு கொள்ளப்பட்ட விடயம் என்னவெனில் ஆய்வுப்பிரதேசத்திலுள்ள விவசாயிகளில் 95 வீதத்திற்கும் அதிகமான விவசாயிகள் நெற்பயிர் வேளாண்மையில் பல்வேறு சவால்களை எதிர் கொள்கின்றனர் என்பதாகும். இவ்வாறான சவால்களை குறைப்பதற்கும் இப்பிரதேச நெற்செய்கையை வளர்ச்சியடைய செய்து கிராமிய, மாவட்ட, தேசிய மட்டங்களில் பொருளாதார மேம்பாட்டிற்கு வித்திடுவதற்கும் இவ் ஆய்வானது முக்கியதொரு களமாக அமைந்துள்ளது.

பிரதானசொற்கள் - விவசாயம், நெற்பயிர், விவசாயிகள்

**ஆய்வின் அறிமுகம்**

உலகளாவிய ரீதியில் விவசாயமானது இன்றியமையாத ஒரு பொருளாதார நடவடிக்கையாக திகழ்கின்றது. இவ்விவசாயமானது உலகின் சகல நாடுகளும் வெவ்வேறு அளவுகளில், வேறுபட்ட தரங்களில் பலவகையான முறைகளையும் பிரயோகித்து காலரீதியான, இடரீதியான வேறுபாடுகளுக்கு ஏற்ப மேற்கொள்ளப்படும் ஒரு பொருளாதார செயற்பாடாகும். விவசாய நடவடிக்கைகளின் விரிவாக்கம் விரைவாக்கம் என்பவற்றின் தேவை இரண்டாம் உலக மகா யுத்தத்தம் முடிவுற்றதைத் தொடர்ந்து ஏற்பட்ட சனத்தொகை அதிகரிப்பின் மூலம் உணரப்பட்டது.

“மனிதன் தோற்றம் பெற்ற காலம் முதலாக தனது அடிப்படை உணவு தேவையை வேறுபட்ட முறைகளில் பூர்த்தி செய்து வந்துள்ளான். இவ்வரலாற்றுக்கட்டத்தில் ஒரு படி முறையாக உலகரீதியாக விவசாயம் தோற்றம் பெற்றுள்ளது.” (Wough 2002)

தொல்பொருள் ஆராய்ச்சி நிலைய தகவலின் படி நெல் 6000ம் வருடத்திற்க்கு முன் இமயமலையின் அடிவாரமான வடகிழக்கு இந்தியா, இந்தோ-சைனா எல்லைப் பகுதி, தென்மேற்கு சைனாப்பகுதிகளில் பயிரிடப்பட்டுள்ளது. இவை முதலில் ஈர நிலங்களிலும், சதுப்புநிலங்களிலும் பயிரிடப்பட்டன. பின்பு நல்ல காலநிலை, மழைப்பொழிவு போன்ற சூழ்நிலையிலும் பயிரிடப்பட்டது. ஆனால் தற்பொழுது உலகில் 157 மில்லியன் ஹெக்டயர் பரப்பில் நெல் உற்பத்தியாகின்றது. உலகில் வருடா வருடம் ஏறத்தாழ 500ற்க்கு மேற்பட்ட மில்லியன் மெற்றிக் தொன் நெல் அறுவடை செய்யப்படுகின்றது. நெல் உற்பத்தியில் முதலிடத்தை வகிப்பது சீனாவாகும். ஏறத்தாழ 180 மில்லியன் மெற்றிக் தொன் உற்பத்தியும், இந்தியாவில் 104, பங்களாதேசில் 31 மில்லியன் மெற்றிக் தொன் நெல்லும் உற்பத்தியாகின்றது.

ஆசியாவில் வெப்ப மற்றும் ஈரப்பதனான பருவக்காற்று வானிலை கொண்டுள்ளதால் நெற்பயிர் முதன்மையாக உள்ளது. இது பரம்பரை பரம்பரையாக நன்கு நீர் வசதியுள்ள ஆற்றுப்பள்ளத்தாக்குகளிலும், வடிநிலங்களிலும் நீரப்பாசன வசதியுடன் மேடு மற்றும் வரட்சி நிலங்களிலும் பயிர் செய்யப்படுகிறது.

இந்த வகையில் இலங்கையானது வளர்ந்து வருகின்ற தன்னிறைவு பொருளாதாரத்தினை கொண்ட ஒரு விவசாய நாடாகும். இங்கு நெல் உற்பத்தியானது பண்டைய காலந்தொட்டு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. ஆரம்பத்தில் சுயதேவைக்காக உற்பத்தி செய்யப்பட்ட நெல்லானது இன்று வர்த்தக நோக்கத்துக்காகவும் உற்பத்தி செய்யப்படுகின்றது. இதனால் இலங்கையினுடைய மொத்த தேசிய உற்பத்தியிலும் ஏற்றுமதி வருவாயிலும் தொழில்படையினர் அத்துறையில் ஈடுபட்டிருத்தலிலும் முக்கியமான துறையாக விவசாயம் திகழ்கின்றது. இலங்கை மக்களின் பிரதான உணவாக நெல் அரிசி சோறு காணப்படுகின்றது. இலங்கையில் நெல் உற்பத்தியானது தனது நிலையில் 63 விகித வளர்ச்சியினை பெற்றுள்ளது. இலங்கையில் அனைத்து மாவட்டங்களிலும் நெற்பயிரினை உற்பத்தி செய்கின்றனர். குறிப்பாக அம்பாறை, மட்டக்களப்பு, குருநாகல், திருகோணமலை, அநுராதபுரம், பொலநறுவை ஆகிய மாவட்டங்களில் அதிக விளைச்சல் காணப்படுகின்றது.

இந்த வகையில் ஆய்வுப்பிரதேசமான சம்மாந்துறையில் மக்களின் பிரதான ஜீவனோபாயமாக விவசாயம் காணப்படுகிறது. இங்கு வாழும் மக்களில் பெரும்பான்மையானோர் விவசாயத்தையே பிரதான தொழிலாக கொண்டு செயற்படுகின்றனர். இப்பிரதேசத்தில் சிறுபோகம், பெரும்போகம் என்ற 2 பருவ காலப்பகுதியில் நெல் உற்பத்தி இடம்பெறுகிறது. சிறுபோகம் என்பது ஏப்ரல் முதல் ஓகஸ்ட் வரையான 5 மாதங்களை அடிப்படையாக கொண்டும், பெரும்போகம் என்பது செப்டம்பர் முதல் மார்ச் வரையான 7 மாதங்களை அடிப்படையாக கொண்டும் நெல் உற்பத்தி நடவடிக்கை இடம் பெற்றுவருகின்றது. இவ்வாறான நெல் உற்பத்திக்கு நீர் வெப்பநிலை, காற்று, மண், தரைஉயர வேறுபாடு, சாய்வுக் கோணம் போன்ற பௌதீக காரணிகளும், நிலத்தின் அளவு போக்குவரத்து, சந்தை, மூலதனம், அரசு, தொழில்நுட்பம் தொழிலாளர் வசதி போன்ற சமூக , பொருளாதார காரணிகளும் செல்வாக்கு செலுத்துகின்றன.


ஆய்வுப்பிரதேசத்தில் இவ்வாறான பௌதீக. சமூக, பொருளாதார காரணிகளின் தாக்கத்தினால் நெல் உற்பத்தியின் அளவு போகத்திற்கு போகம் வேறுபடுவது மட்டுமல்லாமல் இவ்வாறான உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபடும் போது விவசாயிகளும் அவர்களது குடும்பங்களும் பல்வேறு இன்னல்களை எதிர் நோக்கி வருகின்றனர். எனவே இவ்வாறான விவசாயிகளின் இன்னல்களை எடுத்துக்காட்டி அத்தகைய விளைவுகளுக்கு தீர்வுகளை முன்வைப்பதாகவே இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

**ஆய்வுப்பிரதேசம்**

இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் அம்பாறை மாவட்டத்தில் காணப்படுகின்ற ஒரு பெரும் பிரதேசமே சம்மாந்துறை ஆகும். இலங்கையில் காணப்படும் 25 மாவட்டங்களுள் மூன்றாவது பெரிய மாவட்டமாக

அம்பாறை மாவட்டம் காணப்படுகின்றது. இம்மாவட்டமானது வடக்கே மட்டக்களப்பையும், கிழக்கே வங்கக் கடலையும், தெற்கே அம்பாந்தோட்டையையும், மேற்கே மொனராகலையையும் எல்லையாகக் கொண்டுள்ளது.

அம்பாறை மாவட்டத்திலுள்ள 20 செயலகப் பிரிவுகளில் சம்மாந்துறை பிரதேச செயலகப் பிரிவும் ஒன்றாகும். இப் பிரதேசமானது 123.02 $km^2$ பரப்பையும் சுமார் 73640 சனத்தொகையையும் கொண்டுள்ளது. அதுமட்டுமன்றி இங்கு 19923 குடும்பங்கள் வாழ்ந்து கொண்டும் வருகின்றன. இங்கு முஸ்லிம்கள் மட்டுமல்லாது தமிழர்கள், சிங்களவர்கள் மற்றும் பறங்கியர்கள் முதலானோரும் ஒற்றுமையுடன் நீண்டகாலமாக வாழ்ந்து வருகின்றனர். இப் பிரதேசத்தில் வாழும் மக்கள் தங்களது பிரதான ஜீவனோபாயமாக விவசாயத்தை கொண்டிருக்கின்றனர். எனினும் இங்கு இன்னும் சில மக்கள் தங்களது கல்வி வளத்திற்கமைய அரசாங்க தொழில் வாய்ப்புக்களை பெற்று வாழ்கின்றனர் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். மேலும் இப் பிரதேச மக்கள் தங்களுக்கு வருமானம் ஈட்டும் வகையிலாக வர்த்தகம் கைத்தொழில் முதலானவற்றிலும் ஈடுபாடு கொண்டவர்களாகவும் காணப்படுகின்றனர்




**Retrieved from –Arc GIS**

**ஆய்வுப்பிரச்சினை**

சம்மாந்துறை பிரதேசத்தில் விவசாயமானது இன்றியமையாத பொருளாதார நடவடிக்கையாக திகழ்கின்றது. இங்கு வாழ்கின்ற மக்களில் பெரும்பாலானவர்கள் விவசாயிகளாகவே காணப்படுகின்றனர்.இவர்கள் நெல் உற்பத்தியின் போது பல பௌதீக, சமூக, பொருளாதார காரணிகளின் தாக்கத்தினால் பல்வேறு விதமான சவால்களை எதிர் நோக்குகின்றனர்.இச்சவால்கள் அத்தியவசிய தேவையின் பால் எழுவதனால் இதனை தவிர்க்க முடியாது சமூக சூழலில் பல்வேறு பிரச்சினைகளையும் சமூக சிக்கலையும் ஏற்படுத்தி விடுகின்றது. இதுவே இவ் ஆய்வினுடைய பிரச்சினையாகும்.

**ஆய்வின் நோக்கம்**

சம்மாந்துறை பிரதேச நெற்பயிர்ச்செய்கையாளர்கள் எதிர் கொள்கின்ற பிரச்சினைகளை இனங்காண்பதே இவ் ஆய்வினுடைய நோக்கமாகும்.

**ஆய்வு முறையியல்**

ஆய்வினை திறன்பட செய்து முடிக்க ஆய்வுடன் தொடர்புடைய தரவுகள் இன்றியமையாததாகும். இவ்வாய்வினை சீராக செய்வதற்கு முதலாம் நிலைத்தரவுகள் மற்றும் இரண்டாம் நிலைத்தரவுகள் பயன்படுத்தப்பட்டன. முதலாம் நிலைத்தரவுகளாக வினாக்கொத்து, நேர்காணல், நேரடி அவதானிப்பு ஆகிய

முறைகள் பயன்படுத்தப்பட்டன. வினாக்கொத்தானது சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட 4699 விவசாயிகளில் 100 விவசாயிகளுக்கு எளிய எழுமாற்று அடிப்படையில் வழங்கப்பட்டு தரவுகள் பெறப்பட்டன. அத்துடன் ஆய்வுப்பிரதேசத்திலுள்ள விவசாய குடும்பங்கள், பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்த முடியாத விவசாய நிலங்கள், நடைமுறையில் இயங்காத உரக்களஞ்சியசாலை, புணரமைக்கப்படாத, பராமரிக்கப்படாத குளங்கள் என்பவற்றிற்கு சென்று நேரடி அவதானிப்புக்களை மேற்கொண்டதுடன் 3 வட்டவிதானைகளிடமும் 2 நீர்ப்பாசன உத்தியோகத்தரிடமும் அனுபவமிக்க 6 விவசாயிகளிடமும் நேர்காணல் மேற்கொள்ளப்பட்டது. இரண்டாம் நிலைத்தரவுகளாக நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தளங்கள், மாதாந்த வெளியீடுகள், அம்பாறை கச்சேரி, விவசாய திணைக்களம், நிலப்பயன்பாட்டு திட்டமிடல் அலுவலகம், பிரதேச செயலகம், விவசாய ஆலோசனை நிலையம் போன்றவற்றிலிருந்து தரவுகள் பெறப்பட்டன.

**தரவுகளை முன்வைத்தலும் பகுப்பாய்வும்**

ஆய்வு ஒன்றினை மேற்கொள்ளும் போது அந்த ஆய்வின் பிரதான பகுதியாக தரவுகளை முன்வைத்தலும் பகுப்பாய்வும் காணப்படுகின்றது.இவ் ஆய்வுக்காக வினாக்கொத்து வழங்குதல், நேர்காணல் மற்றும் நேரடி அவதானிப்பு போன்ற முறைகள் ஆய்வு நுட்பங்களாக பயன்படுத்தப்பட்டு தரவுகள் சேகரிக்கப்பட்டதுடன் அங்குள்ள விவசாயிகளிடம் வினாக்கொத்துக்களை வழங்கி தரவுகள் சேகரிக்கப்பட்டது. மேலும் அப்பிரதேசத்தில் உள்ள விவசாய குடும்பங்கள், பயிர்ச்செய்கைக்கு பயன்படுத்த முடியாத விவசாய நிலங்கள், நடைமுறையில் இயங்காத உரக்களஞ்சியசாலை, புணரமைக்கப்படாத, பராமரிக்கப்படாத குளங்கள் என்பவற்றிற்கு சென்று நேரடியாக அவதானித்ததுடன் விவசாய உற்பத்தி நடவடிக்கையோடு தொடர்பானவர்களிடம் நேர்காணல் மேற்கொண்டதன் மூலமும் தரவுகள் சேகரிக்கப்பட்டன. வினாக்கொத்தில் விடையளித்தவர்கள், நேர்காணலில் பதிலளித்தவர்கள் போன்றோர்களின் எண்ணிக்கையை கொண்டும் முடிவுகள் பெறப்பட்டு ஆய்வு முடிவுகளை இலகுவாக விளங்கி கொள்வதற்காக SPSS, MS excel, Arc GIS போன்ற மென்பொருட்களினூடாக பகுப்பாய்வு செய்யப்பட்டு அட்டவணைகள்,வரைபடம் மூலமாக அவை முன்வைக்கப்பட்டுள்ளன.

**.கலந்துரையாடலும் பகுப்பாய்வும்**

**Table – 01.சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவில் உள்ள விவசாயிகள் தொடர்பான விபரம்**

| எண் | சம்மாந்துறை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கிராமப்பிரிவுகள் | விவசாயிகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 01 | Sammanthurai-01 | 64 |
| 02 | Sammanthurai-02 | 70 |
| 03 | Sammanthurai-03 | 139 |
| 04 | Sammanthurai-04 | 96 |
| 05 | Sammanthurai-05 | 12 |
| 06 | Sammanthurai-06 | 49 |
| 07 | Sammanthurai-07 | 115 |
| 08 | Sammanthurai-08 | 57 |
| 09 | Sammanthurai-09 | 318 |
| 10 | Sammanthurai-10 | 59 |
| 11 | Sammanthurai-11 | 30 |
| 12 | Sammanthurai-12 | 64 |
| 13 | Tamil Division-01 | 45 |
| 14 | Tamil Division-02 | 31 |
| 15 | Tamil Division-03 | 64 |
| 16 | Tamil Division-04 | 4 |
| 17 | Maddakalapputharavai-01 | 98 |
| 18 | Maddakalapputharavai-02 | 70 |
| 19 | Karuvaddukal-01 | 80 |
| 20 | Karuvaddukal-02 | 75 |
| 21 | Karuvaddukal-03 | 134 |
| 22 | Veeramunai-01 | 30 |
| 23 | Veeramunai-02 | 65 |
| 24 | Veeramunai-03 | 54 |

| | | |
|---|---|---|
| 25 | Veeramunai-04 | 65 |
| 26 | Block j East-01 | 138 |
| 27 | Block j East-02 | 96 |
| 28 | Block j East-03 | 82 |
| 29 | Block j west-01 | 125 |
| 30 | Block j west-02 | 165 |
| 31 | Kallarichel-01 | 46 |
| 32 | Kallarichel-02 | 137 |
| 33 | Kallarichel-03 | 51 |
| 34 | Villiniyadi-01 | 380 |
| 35 | Villiniyadi-02 | 122 |
| 36 | Villiniyadi-03 | 101 |
| 37 | Udanka-01 | 144 |
| 38 | Udanka-02 | 93 |
| 39 | Malayadigiramam-01 | 181 |
| 40 | Malayadigiramam-02 | 135 |
| 41 | Malayadigiramam-03 | 58 |
| 42 | Malayadigiramam-04 | 88 |
| 43 | Sennalgiramam-01 | 126 |
| 44 | Sennalgiramam-02 | 253 |
| 45 | Malwatta-01 | 99 |
| 46 | Malwatta-02 | 63 |
| 47 | Malwatta-03 | 32 |
| 48 | Malwatta-04 | 8 |
| 49 | Valattapitti-01 | 82 |
| 50 | Valattapitti-02 | - |
| 51 | Malkampity | 6 |
| | மொத்தம் | 4699 |

மூலம்: பிரதேச செயலகம், சம்மாந்துறை

**சம்மாந்துறை பிரதேச விவசாயிகள் நெற்செய்கை தொடர்பாக எதிர் நோக்கும் சவால்கள்.**

01. பௌதீக ரீதியான பிரச்சினைகள்

ஆய்வுப்பிரதேசத்தில் விவசாயிகள் எதிர் நோக்கும் பௌதீக ரீதியான பிரச்சினைகள் எனும் போது பிரதானமாக இயற்கை அனர்த்தங்களின் செல்வாக்கு மிக முக்கிய காரணியாக காணப்படுகின்றது. பெருமளவில் நெல் உற்பத்தியில் பாதிப்பினை ஏற்படுத்தும் இயற்கை அனர்த்தங்களாக வெள்ளப்பெருக்கு, வரட்சியினை அடையாளப்படுத்தலாம்.

- வெள்ளப்பெருக்கு- ஆய்வுப்பிரதேசத்தில் மழையானது வடகீழ் பருவ பெயர்ச்சி காலங்களில் அதிகமாக கிடைக்கின்றமை, நீர்ப்பாசன கால்வாய்களில் விவசாய கழிவுகள் கொட்டப்படுதல், ஆறுகள், வடிகாண் பகுதிகளில் மணல், அடையல்கள் படிதல் போன்ற பல்வேறு காரணிகளின் செல்வாக்கினால் வெள்ளப்பெருக்கு ஏற்படுகின்றது. குறிப்பாக சம்மாந்துறை பிரதேசத்தில் 2011,2012 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட வெள்ள பெருக்கினால் பெருமளவான விவசாய நிலங்கள் பாதிக்கப்பட்டு விவசாயிகள் பல இன்னல்களுக்கு முகங் கொடுத்தனர்.

- வரட்சி – ஆய்வுப்பிரதேசத்தில் நெற்செய்கையின் வளர்ச்சி பருவத்தில் மழைவீழ்ச்சி குறைவாக கிடைக்கப்பெறுவதால் நீர்ப்பற்றாக்குறை ஏற்பட்டு வரட்சி நிலவுகின்றது.இதனால் நிலங்கள் வரண்டு துண்டம் துண்டமாக வெடிப்புக்குள்ளாவதால் பயிர்களின் வளர்ச்சியும் குன்றுகின்றது. இதுமட்டுமல்லாமல் வரட்சி காலப்பகுதியில் அதிகமான காற்று மேல் மண்ணை வாறியெடுத்துச் செல்வதால் வளமான பயிர் நிலங்கள் நாசமாகின்றன. இதனால் இக்காலப்பகுதியில் நெல் உற்பத்தியும் குறைவாகவே கிடைக்கப் பெறுகின்றன. எடுத்துக்காட்டாக 2000, 2003, 2005, 2007, 2016, 2017, 2018 ஆம் ஆண்டுகளில் நிலவிய வரட்சியினால் நெல் உற்பத்தியின் அளவு ஏனைய ஆண்டுகளை விட

குறைவாக காணப்படுகின்றது. இதனை கீழுள்ள நெல் விவசாய உற்பத்தியினைக்காட்டும் அட்டவணையில் அவதானிக்க கூடியதாக உள்ளது.

**Table – 02 சம்மாந்துறை பிரதேசத்தின் நெல் விவசாய உற்பத்தி (2000 - 2018)**

| YEAR | YALA SEASON | MAHA SEASON |
|---|---|---|
| 2000 | 49948.4 | 50103.3 |
| 2001 | 49949.7 | 50109.7 |
| 2002 | 49988.4 | 50123 |
| 2003 | 50189 | 50218.4 |
| 2004 | 49984 | 50459.7 |
| 2005 | 50633.2 | 50539.3 |
| 2006 | 50633.4 | 50403 |
| 2007 | 50743 | 50496 |
| 2008 | 51023 | 51049 |
| 2009 | 52024.9 | 52216.9 |
| 2010 | 52391.8 | 52763 |
| 2011 | 52624.3 | 38498.6 |
| 2012 | 53949.7 | 53409 |
| 2013 | 54673 | 53478.4 |
| 2014 | 50028.1 | 54243 |
| 2015 | 55224 | 55854 |
| 2016 | 55237 | 55924 |
| 2017 | 10670.4 | 22321.6 |
| 2018 | 22154 | 22120 |

மூலம்: கமநல சேவை நிலையம், சம்மாந்துறை.

- நோய்ப்பீடைகள் - இயற்கையாகவே நெற்பயிர்ச்செய்கையை பாதிக்கும் மற்றுமொரு காரணியாக பயிர்களில் ஏற்படக்கூடிய நோய்கள்,பீடைகள் காணப்படுகின்றன.சம்மாந்துறை பிரதேசத்தினை பொறுத்த வரையில் நோய்ப்பீடைகளின் தாக்கமானது பெரும்பாலும் சிறுபோக காலங்களிலேயே பாரிய அளவில் இடம் பெறுவதை அவதானிக்க முடிகின்றது. இதற்கு முக்கிய காரணியாக காலநிலையில் நிலவும் வரட்சி தன்மை திகழ்கின்றது. இத்தகைய நோய்களின் தாக்கமானது விவசாயிகளை பொருளாதார ரீதியாகவும். உளவியல் ரீதியாகவும் பாதிப்படைய செய்கின்றது.

- விலங்குகளின் செயற்பாடு - ஆய்வுப்பிரதேசத்தில் நெற் பயிரினை அழித்து விவசாயிகளுக்கு சேதங்களை விளைவிப்பதில் விலங்குகளின் செல்வாக்கு முக்கிய பங்கு வகிக்கின்றது. இந்த வகையில் பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் முக்கிய விலங்குகளாக யானை, குரங்கு, ஆமை போன்றவற்றை குறிப்பிடலாம்.

  ஆமைகள் வயல் நிலய்களில் நீர் நிறைந்து காணப்படும் போது நீருக்குள் இருக்கும் நெற்பயிரினை அடியால் வெட்டுவதனால் பயிர் பாதிப்படைகின்றது. இதுமட்டுமல்லாது சம்மாந்துறை விவசாயிகள் அண்மைக்காலங்களில் எதிர் நோக்கும் பாரிய சவாலாக காட்டு யானைகளின் தொல்லை நிலவுகின்றது. இது விவசாயத்தை பெரிதும் பாதிக்கின்றது. யானைகள் விவசாய நிலங்களுக்குள் நடமாடுவதால் குறிப்பாக 2000-2007 வரையான காலப்பகுதிகளில் 200 ஏக்கருக்கு மேற்பட்ட பயிரினங்கள் நாசமாக்கப்பட்டது. அத்துடன் ஊருக்குள் நடமாடும் போது நெற்பயிர் உள்ள இடங்களுக்கு சென்று அதனை சேதமாக்குதல் போன்ற பல்வேறு செயற்பாடுகளினால் விவசாயிகள் தங்களது முதலீட்டை கூட இந் நெல் உற்பத்தியில் பெற முடியாத சூழல் நிலவுகின்றது.

  (வட்ட விதாணைகள் ,அனுபவமிக்க விவசாயிகளின் நேர்காணல், 2019)


02. குளங்கள் புணரமைக்கப்படாமை.

மழைவீழ்ச்சி குறைவாக கிடைக்கப் பெறுகின்ற காலப்பகுதிகளில் விவசாய நடவடிக்கைகளுக்கு நீரினை வழங்கும் தளமாக குளங்கள் மற்றும் கால்வாய்கள் திகழ்கின்றன. குளம் என்பது நன்னீர் நீர்நிலையாகும். நீரூற்றுக்களில் இருந்து நீர் வீணாகுவதை தடுக்கவும் மழை நீரை சேமிப்பதை நோக்காக கொண்டும் இவை

உருவாக்கப்பட்டது. குளத்தின் நீர் கால்வாய்கள் வழியாக விவசாயம் செய்வதற்கு ஏற்ற வகையில் வடிவமைக்கப்பட்டும் காணப்படுகின்றது. ஆய்வுப்பிரதேசமான சம்மாந்துறையில் பிரதானமாக வளத்தாப்பிட்டி குளம் விவசாய நடவடிக்கைகளுக்காக பயன்படுக்கப்பட்டு வந்தன. எனினும் 1990 ம் ஆண்டைய இனக்கலவரத்தின் காரணமாக இவை புணரமைக்கப்படாமலேயே தற்காலம் வரை காணப்படுகின்றமை நேரடி அவதானிப்பின் போது கண்டு கொள்ளப்பட்டது. இதனால் சேனக்காடு என்ற மேட்டு நெற்பயிர் பிரதேசங்கள் கோடை காலங்களில் நீர்ப்பாய்ச்சல் பிரச்சினையை எதிர்நோக்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கதொரு விடயமாகும்.

03. நீர்ப்பற்றாக்குறை

நெல் உற்பத்திக்கு வெப்பநிலை, தரைத்தோற்றம், மண்வளம்,காற்று போன்ற பௌதீககாரணிகள் செல்வாக்கு செலுத்துகின்ற போதிலும் நீர் இன்றி நெல் உற்பத்தி சாத்தியமற்றது என்றே கூறலாம்.நெற்பயிரின் முளைப்பு ,வளர்ச்சி ,பெருக்கம் மற்றும் உற்பத்திக்கு நீர் அத்தியவசியமானதாக காணப்படுகின்றது.நெல்லின் தழை வளர்ச்சி கட்டம், இனப்பெருக்க காலங்களில் நீர்ப்பற்றாக்குறை நிலவுகின்ற போது மலட்டுத்தன்மை ஏற்பட்டு அதிக சதவிகுத மகசூல் இழக்கப்படுகின்றது. இதனால் நெல் உற்பத்தியின் அளவும் குறைகின்றது. இவ்வாறான நிலையே சம்மாந்துறை பிரதேசத்திலுள்ள விவசாய நிலங்களிலும் நிலவுகின்றது. இதற்கு பிரதான காரணம் இந்நிலங்களுக்கு நீரை வழங்குகின்ற சேனநாயக்க சமுத்திரத்தில் நீர்ப்பற்றாக்குறை நிலவுகின்றமையாகும். இதனை பின்வரும் வரைபடம் எடுத்து காட்டுகின்றது.




மூலம்: நீர்ப்பாசன திணைக்களம், சம்மாந்துறை

04. பொதுவான உரக்களஞ்சியசாலை இன்மை

ஆரம்ப காலங்களில் சம்மாந்துறையில் அமைக்கப்பட்டு இருந்த உரக்களஞ்சிய சாலையாலையானது 1990 ஆம் ஆண்டு ஏற்பட்ட பயங்கரவாத இனக்கலவரத்தின் காரணமாக மூடப்பட்டு தனியாருக்கு விற்கப்பட்டது. இதற்குப்பின் அரசாங்கத்தினால் பொதுவான உரக்களஞ்சிய சாலை ஒன்று இதுவரை அமைக்கப்படவில்லை. இதனால் இங்குள்ள அதிகாரிகள் மக்களது பாதுகாப்பு நிலமைகளை கருத்திற் கொண்டு விவசாயிகளுக்கு உரங்கள், கிருமி நாசினிகள் வழங்குவதை மட்டுப்படுத்தியுள்ளனர். இதன் காரணமாக குறித்த காலங்களில் தேவையான கிருமி நாசினிகளுக்கு தட்டுப்பாடு ஏற்படுகின்றது. இத்தட்டுப்பாட்டின் மூலம் உரிய காலங்களில் தேவையான கிருமி நாசினிகளை விசிர முடியாமல் இருப்பதனால் போதிய விளைச்சலை விவசாயிகளுக்கு பெற முடியாமல் போகின்றது.இது மட்டுமல்லாமல் தற்காலங்களில் வட்டவிதானைகளின் வீடுகளில் உரங்கள், கிருமி நாசினிகளை மொத்தமாக இறக்குமதி செய்வதனால் அங்கு சூழல் மாசாக்கம் போன்ற பல்வேறு சவால்கள் ஏற்படுகின்றது. என்று வட்ட விதானைகள் நேர்காணலின் போது ஆதங்கமாக தெரிவித்தார்கள்.

05. சந்தைப்படுத்துவதற்கு போதிய இடம் இன்மை

சந்தை என்பது பொது மக்களின் அடிப்படை தேவைகளில் பெரும்பாலும் உணவு தேவையினை ஒரே கூரையின் கீழ் பெற்று கொள்வதற்கு உதவி நல்கிறது. இச்சந்தை நவீன சமூகத்தினரின் ஒரு அத்தாட்சியாகும். அதுமட்டுமன்றி பல்வேறு வியாபாரிகள், முயற்சியாளர்கள், உற்பத்தியாளர்கள், விவசாயிகள், மீனவர்கள், சிற்றூழியர்கள் என அனைவருக்கும் தொழில் வழங்குகின்ற பொது இடமாகவும் இதனைக் காணலாம். நவீன சமூகங்களில் இதன் இல்லாமை சாத்தியமற்றது எனலாம். இந்த வகையில் சம்மாந்துறை பிரதேசத்தில் பொதுச்சந்தையானது ஹிஜ்ரா சந்தியில் மட்டுமே உள்ளது.இந்நிலையில் ஹிஜ்ரா சந்தைக்கு அருகாமையில் பள்ளிவாசலும் ஏனைய வர்த்தக நிலையங்களும் காணப்படுவதால் இச் சந்தையானது குறைவான எல்லைக்குட்பட்டு இயங்குகின்ற வகையில் விவசாயிகள் தங்களது அறுவடைகளை விற்பனை செய்வதற்கு சிரமமான நிலையில் அலைக்களிக்கப்படுகின்றனர்.

06. விவசாய விரிவாக்கல் நடவடிக்கை பற்றிய போதிய அறிவின்மை

இங்குள்ள விவசாய திணைக்கள உத்தியோகத்தர்கள் விவசாயிகளுக்கு விவசாய உற்பத்தி நடவடிக்கைகளை இலாபமீட்ட கூடிய உன்னதமான முறையில் நிறைவேற்றுவதற்கு தேவையான ஆலோசனைகளை ( புதி இன விதை நெல் வகைகள், நோய்கள், நோய் தடுப்பு முறைகள்) வழங்குவது குறைவாகவே காணப்படுகின்றது. இவ்வாறான சூழ் நிலையில் சில விவசாயிகளின் அறியாமையின் காரணமாவும் அவர்கள் பயிர் செய்யப்படும் நெல் வகைகள் காற்றிற்கு சாய்வதால் இயந்திர அறுவடையின் போது அதிக செலவு ஏற்படுவதுடன் தரமற்ற வெளியீடுகளையும் அதிக இழப்புக்களையும் எதிர் நோக்க வேண்டியுள்ளது.

07. போதிய அளவு கடன் பெற முடியாமை

எந்தவொரு உற்பத்தி நடவடிக்கைக்கும் மூலதனம் இன்றியமையாததாக காணப்படுகின்றது. தற்காலத்தில் விவசாய நடவடிக்கைகள் இயந்திரமயமாகி வருவதனால் தேவையான சில கருவிகளை கொள்வனவு செய்ய விவசாயிகளுக்கு ஆரம்பத்தில் பணம் தேவைப்படுகின்றது. இரசாயனப்பசளை , கிருமி நாசினிகள் முதலான உள்ளீடுகளின் கொள்வனவிற்கும் மூலதனம் தேவையான இந்நிலையில் சம்மாந்துறையிலுள்ள விவசாயிகள் கடனாளிகளாகவும் , வறியவர்களாகவும் உள்ளனர். இந்நிலையில் கடன் பெறுவதற்கு இறுக்கமான நடைமுறைகள் , அதிகமான பிணைப்பத்திரங்கள் போன்றவற்றை இங்குள்ள வங்கிகள் நடைமுறைப்படுத்தி உள்ளதால் விவசாயிகள் கடன் பெறுவது கடினமாக உள்ளது. இத்துடன் விவசாயிகளுக்கு மானியம் வழங்குவது மிகவும் குறைவடைந்து காணப்படுகின்றது. இதன் விளைவாக விவசாயிகள் தனியாரிடம் தங்களின் தேவைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கு நாடுகின்றனர். இதனால் குறைந்த விலைக்கு தங்களின் விளைச்சல்களை விற்பனை செய்வதற்கு உந்தப்படுகின்றனர்.

08.இயந்திரங்களின் பற்றாக்குறை

விவசாய நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதில் இன்றியமையாத ஒன்றாக இயந்திரங்கள் திகழ்கின்றன. தற்காலத்தில் ஏனைய பயிர்ச்செய்கை நடவடிக்கைகளை விட நெற்பயிர்ச்செய்கையிலே இயந்திரங்களின் பாவணை அதிகமாக காணப்படுகின்றது. உதாரணமாக கை டிராக்டர்கள் முதல் அறுவடை இயந்திரங்கள் வரையுள்ள பல்வேறு இயந்திரங்களை குறிப்பிடலாம். இவ்வாறான இயந்திரங்களை சம்மாந்துறையிலுள்ள ஒரு சில வசதி படைத்தவர்களே கொள்வனவு செய்துள்ளனர். இதனால் விவசாய நடவடிக்கைகளில் ஈடுபடுகின்ற 4699 விவசாயிகளும் இவர்களையே நாடிச் செல்கின்றனர். இவ் வேளையில் இவர்களின் அலட்சிய தன்மை மறறும் அறுவடை செய்வதற்கான தொகையினை நாளுக்கு நாள் மாற்றம் செய்தல் போன்ற பல்வேறு சவால்களை இங்குள்ள விவசாயிகள் முகம் கொடுக்கின்றனர். இது மட்டுமல்லாது அறுவடை செய்ய வேண்டிய காலங்களில் இயந்திர பற்றாக்குறை காரணமாக அறுவடை செய்யாமல் நீண்ட நாட்களின் பின் அறுவடை செய்வதனால் நெல் உற்பத்தியின் அளவும் குறைகின்றது.

**ஆய்வின் பரிந்துரைகள்**

01. சம்மாந்துறை பிரதேசத்தில் நிலவுகின்ற பௌதீக ரீதியான பிரச்சினைகளை தீர்ப்பதற்காக பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.
    - இப்பிரதேசத்தில் வெள்ளப்பெருக்கு காலங்களில் நீரை தேக்கி வைக்க கூடிய வகையில் இடையிடையே சிறு குளங்களுக்கு நீரை வழங்குவதோடு அவை ஆழமாக அமைக்கப்பட நடவடிக்கை எடுத்தல்.
    - இப்பிரதேசங்களில் பயிரிடப்படும் விதையினங்கள் குட்டையாக வளரக்கூடியதாக தெரிவு செய்யப்படுமானால் காற்றினால் சாய்க்கப்படும் தன்மையை குறைக்கலாம்.
    - வரட்சியை தாங்கி வளரக்கூடிய நல்லின விதையினங்களை தெரிவு செய்தல்.
    - நெல்லின் நோய்ப்பீடை கட்டுப்பாடுகளுக்கு உயிரியல் ரீதியிலான கட்டுப்பாட்டு முறையை முடிந்த அளவு கடைப்பிடித்தல்.
    - தரை கீழ் நீர் சேகரிப்பு திட்டங்களை மேற் கொள்ளல்.

02. நீர்ப்பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்காக பின்வரும் வழிமுறைகளை ஆய்வுப்பிரதேசத்தில் முன்னெடுக்க வேண்டும்.
    - பயிரின் நீர்த்தேவைக்கு ஏற்ப ஒழுங்கான முகாமை அடிப்படையில் நீரை பாய்ச்சுவதற்கான அறிவுறுத்தல்களை வழங்குதல்
    - மழை நீர் சேகரிப்பு திட்டங்களை மேற்கொள்ளல்.
    - காடுகள் அழிக்கப்படுவதை தடை செய்தல்.
    - குளங்கள் புணரமைக்கப்படவும் அத்துடன் வாய்க்கால்கள் துப்பரவு செய்யப்படவும் நடவடிக்கைகளை எடுத்தல்.

03. விவசாயிகளுக்கு உணர்வூட்டல் கருத்தரங்குகளை மேற் கொள்ளல்.

04. விவசாயிகளுக்கு மானியங்களை வழங்குவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

05. ஆய்வுப்பிரதேசத்தில் இயந்திர அறுவடைக்கு பொருத்தமான நெல் வகைகளை அறிமுகம் செய்தல்

06. அரச உதவியுடன் உரக்களஞ்சியசாலை ஒன்றை நிறுவுதல்.

07. சம்மாந்துறை பிரதேச சபையின் உதவியுடன் சந்தை விரிவாக்கல் நடவடிக்கைகளை மேற் கொள்ளல்.

08. அரச ஆதரவுடன் இயந்திரங்களை கொள்வனவு செய்து சம்மாந்துறை விவசாயிகளின் இயந்திர பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல்.

**முடிவுரை**

சம்மாந்துறை பிரதேசத்தில் நெல் உற்பத்தியானது இன்றியமையாத பொருளாதார நடவடிக்கையாக திகழ்கின்ற போதிலும் இதில் ஈடுபடுகின்ற விவசாயிகள் பல்வேறு சவால்களை எதிர் கொள்கின்றனர்.இத்தகைய நிலையினை அரச உதவியுடன் நெற்பயிர் விருத்திக்கான , பாதுகாப்புக்கான பல்வேறு செயற்திட்டங்களை முன்னெடுப்பதனூடாகவும் விவசாய ஆலோசகர்களின் துணை கொண்டு விவசாயிகளுக்கு உற்பத்தியை சிறந்த முறையில் மேற்கொள்வதற்கு தேவையான ஆலோசனைகளை வழங்கி நல்ல முறையில் வழிப்படுத்துவதனூடாகவும் விவசாயிகளை பல்வேறு சவால்களில் இருந்து மீட்டெடுக்க முடியும்

**உசாத்துணை**

1. கலீல்,எம்.எம்.(2016).*மானிடப்புவியியல்* :குறிஞ்சி நேர்த்தா அச்சகம்,கண்டி.

2. குணராசா,க.(1997).*இலங்கை புவியியல்*:ஸ்ரீலங்கா வெளியீடு,யாழ்ப்பாணம்.

3. கிருஷ்ணமூர்த்தி,ப.(1976).*உழவியல்* :ஓரியன்ட் லாங்மன்,சென்னை.

4. மூக்கையா,மா.செ.(2005).*இலங்கையின் வளங்களும் பயன்பாடுகளும்*: நியூசெஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்,சென்னை.

5. ஜெஸ்லி,ஜே.ஜோன்.(2001).*அடிப்படை புவியியல்*: உயர் கல்விச்சேவை மையம், யாழ்ப்பாணம்

6. http://agritech.tnau.ac.in/ta/expert_system/paddy/cultivationpractices3.html

7. http://www.sammanthurai24.com/2019/04/blog-post10.html?m=1

8.http://www.google.com/url?sa=t&source=web&rct=j&url=https://www.bbc.com/tamil/sri_lanka/2014/02/140223_paddydroughtlanka&ved=2ahUKEwj6sbvnuezlAhUPeisKHbDKC8k4ChAWMAJ6BAglEAI&usg=AOvVawOW64b_pn9KkEZCe5Gxkn5Z